டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.11.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 135- Madurai | Online Edition

# மத்திய மீன்வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு 48 திட்டங்களுக்கு ஒப்புதல்

புது தில்லி, நவ.28

பிரதமரின் மத்திய மீன்வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்வாழ் உயிரின வளர்ப்பு பூங்காக்கள் நிறுவப்பட்டுள்ளன. இது மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு மதிப்புச் சங்கிலியின் பல்வேறு அம்சங்களுடன் கூடிய பன்முக மீன்வளத்தை உள்ளடக்கிய தாகும். தரமான விதைகள் மற்றும் தீவன உற்பத்தி, அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய உள்கட்டமைப்பு, வர்த்தகம், சரக்கு போக்குவரத்து, சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி மேம்பாடு, புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பக் காப்பகம்,



அறிவு பரவலாக்கம், பொழுதுபோக்கு ஆகியவற்றின் மைய மாக நீர்வாழ் உயிரின பூங்காக்கள் திகழ்கின்றன.

கடந்த நான்கு நிதியாண்டுகளில் (நிதியாண்டு 2020-21 முதல் நிதியாண்டு 2023-24 வரை) மற்றும் நடப்பு நிதியாண்டு (நிதியாண்டு 2024-25) மொத்தம் ரூ.682.6 கோடி செலவில் மொத்தம் 11 ஒருங்கிணைந்த நீர்வாழ் உயிரின பூங்காக்களை அமைக்க மீன்வளத் துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமரின் மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நீர்வாழ் உயிரின பூங்காக்கள் தமிழ்நாடு , ஆந்திரப் பிரதேசம், அருணாசலப் பிரதேசம், அசாம், சட்டீஸ்கர் உள்ளிட்ட 11 மாநிலங்களில் அமைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் நீர்வாழ் உயிரின பூங்காவுக்கு ரூபாய் 127.71 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.




பிரதமரின் மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம், கடந்த ஐந்து நிதியாண்டுகளில் (2020-21 முதல் 2024-25 வரை) தமிழ்நாட்டிற்கு ரூ.1156.15 கோடி மதிப்பிலான 48 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் மொத்த பங்களிப்பு ரூ.448.65 கோடியாகும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் இதில் அடங்கும்.

இதனை மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங் மக்களவையில் தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெல்லில் மிகச்சன்ன இரகங்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி



சிவகங்கை, நவ.28

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரம், மிளகனூர் கிராமத்தில் 28.11.24 வியாழன்கிழமை விரிவாக்க சீரமைப்புத் திட்டம் மூலம் பண்ணைப்பள்ளி – நெல்லில் மிகச் சன்ன இரகங்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி யானது இக்கிராமத்தை சேர்ந்த 25 விவசாயிகளுக்கு நடைபெற்றது.

ஆறு கட்டங்களாக நடைபெறும் இந்த பயிற்சியானது நேற்று இரண்டாம் கட்டப் பயிற்சியாக நடைபெற்றது. இப்பயிற்சியை மானாமதுரை துணை வேளாண்மை அலுவலர் நா.சப்பாணி முத்து, தலைமையேற்று துவங்கி வைத்தார்.

இப்பயிற்சியில் மதுரை RNR அக்ரி டெவலப்பஸ் உரிமையாளர் ராஜேஸ் நல்லையா கலந்து கொண்டு நெல் சாகுபடியில் நாற்றாங்கால் அமைத்தல் நாற்றின் வயது பற்றியும் நடவு வயல் தயார் செய்தல், அடியுரம் இடுதல் மற்றும் நுண்ணூட்ட உரமிடல் போன்ற தொழில் நுட்பங்களும் பிறகு நெல் நடும் போது திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்ய வேண்டும் எனவும் வரப்பில் உளுந்து சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி செயல்விளக்கத்துடன் எடுத்துக் காட்டினார்.

உதவி வேளாண்மை அலுவலர் ரஞ்சினி சுகந்தி, வேளாண் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் இக்கிராம விவசாயி சண்முகவேல் வயலில் அமைக்கப்பட்ட நெல் வயல் பார்வை யிடப்பட்டது. இறுதியாக நல்ல சுகம் என்ற முன்னோடி விவசாயி நன்றி கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் அமிர்தலட்சுமி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வினோத் குமார் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd. Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சம்பா பருவ நெல் சாகுபடி பயிருக்கு காப்பீடு செய்ய நாளை கடைசி நாள்

ஈரோடு, நவ.28

ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மா.சாமுவேல் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டாரத்தில் விவசாயிகளுக்கு ஏற்படும் எதிர்பாராத பயிர் இழப்புகளுக்கு நிதியுதவி வழங்கி பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும், அதிநவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்கப்படுத்த பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு சம்பா பருவத்துக்கு அக்ரிகல்சுரல் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனம் இத்திட்டத்தை செயல்படுத்துகிறது. அதன்படி, நடப்பு சம்பா பருவத்தில் காப்பீடு செய்ய அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. நெல் பயிர் ஏக்கருக்கு பிரிமியத்தொகை ரூ.573 ஆகும்.

கடன் பெறும் விவசாயிகள், கடன் பெறும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் காப்பீடு செய்யலாம். பயிர்கடன் பெறாத விவசாயிகள் நடப்பு பசலி ஆண்டுக்கான அடங்கல் அல்லது பயிர் சாகுபடி சான்றை வி.ஏ.ஓ.விடம் பெற்று, வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல், சிட்டா நகல் இணைத்து, இசேவை மையம் அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம், அல்லது வங்கி மூலமாகப் பதிவு செய்யலாம். ஏக்கருக்கு அதிகப்பட்சமாக ரூ.38,200 இழப்பீடு தொகையாக வழங்கப்படும்.

ஆலங்கட்டி மழை, புயல், புயல் மழை, பருவம் தவறி பெய்யும் மழை, அறுவடை செய்த 14 நாட்களில் நெல் உலர்த்தும்போது சேதாரம் ஏற்படுதல் ஆகிய பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப் படும். சேதாரம் ஏற்பட்ட 3 நாளில் இன்சூரன்ஸ் நிறுவனம் அல்லது வட்டார வேளாண்மைத்துறை அலுவலரிடம் தெரிவித்து, கள ஆய்வு அடிப்படையில் அல்லது தனி நபர் இழப்பீடு முறையில் தொகையை பெறலாம்.

எனவே, விவசாயிகள் உடனடியாக பயிர் காப்பீடு செய்து செய்து கொள்ள சென்னிமலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் மா.சாமுவேல் அறிவுறுத்தியுள்ளார்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 28.11.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 30 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 28 | 32 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 46 | 57A | உருளை(ஊட்டி) | 32 | 56 |
| 2 | வெண்டை | 50 | 54 | 58 | மேரக்காய் | 25 | 28 |
| 3 | தக்காளி (நாடு) | 30 | 35 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 34 | 60 | கேரட் | 70 | 74 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 70 | 74 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 68 | 72 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 45 | 48 |
| 7 | பீர்க்கன் | 40 | 44 | 63 | டர்னிப் | 45 | 48 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 25 | 30 |
| 9 | பாகற்காய் | 30 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 40 | 46 | 66 | காளிபிளவர் | 40 | 43 |
| 11 | பூசணி | 12 | 14 | 67 | பட்டாணி | 100 | 120 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 332 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 22 | 26 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 48 | 52 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 64 |
| 16 | பெ.வெங்காயம் | 58 | 68 | 72 | குடமிளகாய் | 42 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 35 | 73 | ஊட்டி அவரை | 150 | 160 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 0 | 0 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 45 | 48 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 65 | 70 | 75 | எலுமிச்சை | 50 | 60 |
| 25 | சேப்பங்கிழங்கு | 45 | 50 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 60 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 46 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 50 | 58 | 80 | திராட்சை | 50 | 60 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 70 | 80 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 40 | 44 | 91 | பூவன் | 35 | 40 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 40 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 25 | 28 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 24 | 96 | நேந்திரன் | 45 | 50 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 40 | 97 | செவ்வாழை | 65 | 70 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 40 | 44 | | | | |
| 55A | துவரை | 55 | 60 | | | | |

# தானுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து வழங்கும் விழா மற்றும் கால்நடை சிறப்பு சிகிச்சை முகாம்

கள்ளக்குறிச்சி, நவ.28

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் காளசமுத்திரம் வேளாண்மை அறிவியல் நிலையமும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் கால்நடை பராமரிப்பு துறையும் இணைந்து தானுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து வழங்கும் விழா 28.11.24 அன்று மேல் நாரியப்பனூர் கிராமத்தில் நடைப்பெற்றது.

காளசமுத்திரம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மா.விமலாராணி வரவேற்புரை யாற்றினார். இதனைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறையின் உதவி இயக்குநர், மரு.மு.கந்த




சாமி, வாழ்த்துரை வழங்கினார். தலைவாசல் கால்நடை விரிவாக்க கல்வித்துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே.எம்.சக்திவேல், சிறப்புரையும், தலைவாசல் ஊட்டச்சத்தியியல் துறை, முதன்மை விஞ்ஞானி மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் ர.முருகேஸ்வரி, தானுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து பயன்படுத்தும் முறை மற்றும் அதன் சிறப்புகள் பற்றி எடுத்துரைத்தார். தலைவாசல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் அ.இளங்கோ, தலைமையுரையாற்றி தானுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து பயனாளிகளுக்கு வழங்கினார். காளசமுத்திரம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் பி.முரளி நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியை மரு.பேபி உசா, மரு.சுகம், மரு.ஜனார்த்தனன், மரு.சிவக்குமார் ஒருங்கிணைத்தனர்.

இவ்விழாவில் 140 விவசாயிகளுக்கு தானுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தலைவாசல் கால்நடை மருத்துவ கல்லூரி இணைப்பேராசிரியர்கள் முனைவர் செந்தில்குமார், முனைவர் க.தேவகி மற்றும் மாணவ, மாணவிகள் கண்டுணர் சுற்றுலா மூலம் பயன்பெற்றனர். இவ்விழாவுடன் சிறப்பு கால்நடை சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. இதில் 252 மாடுகளுக்கு தடுப்பூசி, 60 கன்றுகளுக்கு பூச்சி மருந்து, 44 மாடுகளுக்கு சிகிச்சை, 32 மாடுகளுக்கு சினை ஊசி மற்றும் சினை பரிசோதனை செய்யப்பட்டது.



# பெருந்துறை வட்டாரத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, நவ.28

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024-2025 ஆம் ஆண்டுக்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டகிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு அமைக்கப்பட்டுஅக்குழுக்களுக்கு ராபி பருவ விவசாயிகள் பயிற்சியானது சின்ன வீரசங்கிலி கிராமத்தில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் கண்ணம்மாள் முன்னிலை வகித்தார்.




மேலும் துணை தோட்டக்கலைஅ லுவலர் செங்கோட்டையன் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் அவற்றை செயல் படுத்தும் முறை பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

கிராம வேளாண் முன்னேற்றக்குழு அமைத்ததன் முக்கிய நோக்கமான தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருதல், நீர் ஆதாரங்களை பெருக்குதல் மற்றும் சூரிய மின்சக்தியின் மூலம் பம்பு செட்டுகள் அமைத்தல் மற்றும் வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்களையும் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தும் முறை குறித்தும் தெளிவாக விளக்கினார். ஜே.கே.கே.எம். உதவி பேரரசியர் போஜராஜ் பேசுகையில் நிலக் கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தெளிவாக விளக்கினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# கீரம்பூரில் கிராம அளவிலான விவசாய மேம்பாட்டுக் குழுவிற்கான ராபி பருவ பயிற்சி



நாமக்கல், நவ.28

நாமக்கல் வட்டார வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் கீரம்பூரில் ‘கிராம அளவிலான விவசாய மேம்பாட்டுக் குழுவிற்கு ராபி பருவகால பயிற்சி’ வழங்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டம், உழவர் பயிற்சி நிலையம், வேளாண்மை துணை இயக்குநர் கோவிந்தசாமி, பயிற்சிக்கு முன்னிலை வகித்து விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட பல்வேறு முன்னோடித் திட்டங்களான முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், ஒருங்கிணைந்த பண்ணையம், பயறு பெருக்குத் திட்டம், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டம் உள்பட பல முன்னோடி நலத்திட்டங்கள் செயல்படுத்தபடுகிறது என விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

மேலும் வேளாண்மை உதவி இயக்குநர் சித்ரா, முக்கிய திட்டங்களில் உள்ள இடைவெளியினை குறைக்கும் வகையில் விவசாயிகளின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் அவர்களின் வருமானத்தை உயர்த்திடவும் பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம், பயிர் காப்பீடு மற்றும் பிரதம மந்திரி கௌரவ நிதித் திட்டம் பெறுவது குறித்தும் உயிரியல் கட்டுப்பாடு ஆய்வகத்தின் மூலம் வழங்கும் டிரைகோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், ஒட்டுண்ணிகள் குறித்தும் விளக்கமளித்து பயிற்சியளித்தார்.

சிறப்பு பயிற்றுநர் துணை வேளாண்மை அலுவலர் (ஓய்வு) வைத்திலிங்கம், வேளாண்மை அலுவலர் காஞ்சனா ஆகியோர் ராபி பருவத்தில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்தும் நிலக்கடலையில் ஏற்படும் வேர் அழுகல் நோய் மற்றும் மக்காசோளப் பயிரில் ஏற்படும் படைப்புழு தாக்குதல், ஒருங்கிணைந்த தென்னை சாகுபடியும் பயிர் பாதுகாப்பு மேலாண்மை

குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமளித்து பயிற்சி வழங்கினர். உடன் உதவி வேளாண்மை அலுவலர் மாலதி, துறை சார்ந்த மானியத் திட்டங்களை எடுத்துக் கூறினார். அட்மா திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் இரமேஷ் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஹரிஹரன் ஆகியோர் வருகை புரிந்த விவசாயிகளுக்கு உழவன் செயலி பயன்களை விளக்கமளித்து பதிவேற்றம் செய்தும் நன்றி கூறி இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.




# மரங்களும் மனிதர்களும் - ஓர் ஒப்பீடு

நம்முடைய முன்னோர்கள் இயற்கையோடு மரம், செடி, கொடிகளுடன் பின்னி பிணைந்து வாழ்ந்து வந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஏகப்பட்ட தமிழ் இலக்கியங்கள் பாடல்கள், குறள் போன்றவை சான்றாக உள்ளது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லாவா?

இயற்கையே உயிர்களைப் பிறப்பிக்கின்றது. இயற்கையே வாழ்விக்கின்றது. அதுவே நம்மை வழியனுப்பியும் வைக் கின்றது. அது எப்படி என்பதை முது பெரும் புலவர் ஔவையார் தனது பாடலில் தெளிவாக கூறியுள்ளார்.

**பாடல்**

சொல்லாமலே பெரியர் சொல்லிச் செய்வர்
சிறியர் சொல்லியுஞ் செய்யார் கயவரே.
நல்ல குவாமாயை வேற் கண்ணாய் கூறுவனமபினபுல்
பலா மாவைப் பாதிரியைப் பார் (த.பா.31)

**இந்த பாடலின் கருத்து என்ன?**

முளைத்து, வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிந்து, முதிர்ந்து, முடிவெய்தும் ஒரு மரத்தைப் போலவே மனித வாழ்வியல் நிறைசெய்கிறது. மரங்களுக்கும் மனிதர்களுக்குள் உள்ள குண ஒற்றுமைகளை படம் பிடித்து காட்டியுள்ளது, இந்த பாடலின் வரிகள் ஒவ்வொன்றும் கருத்தாழமிக்கது.

**மனிதர்கள் மூவகையினராக பிரித்து விளக்கிறார் ஔவை.**

**1) முதல் வகை மனிதர்கள்**

உயர்ந்த எண்ணங்களை கொண்டவர்கள் வறுமையுற்றோர் அவர்களிடம் கொடுத்து உதவுமாறு கேட்க வேண்டியதில்லை. அடுத்தவர் நிலையுணர்ந்து, தாமாகக் கொடுத்து உதவும் இத்தகையோர் காணாமல் பூப்பூத்து கண்டு காய்காய்த்து கனியை நல்கும் பலாவை போன்ற இயல்பினர்கள் தான் முதல் வகை மனிதர்கள்.

**2) இரண்டாம் வகையினர்**

யாரேனும் தம் துயரை சொல்லி உதவி கேட்டால் உதவும் இயல்பினர். இவர்கள் மா மரத்தை போல பூத்துக் காய்த்துக் கனியினை நல்குவர். மாமரம் பூத்து ‘இதோ பூத்துவிட்டேன் இனி காய்கனி தரப்

போகிறேன், என்று அறிவிப்பதை போல வெளிப் படையாக கேட்பவர்க்கு மட்டுமே உதவும் உள்ளம் கொண்டவர்கள் இரண்டாம் வகையினர். மா மரத்துடன் என்ன ஒப்புமை பாருங்க.

**3) மூன்றாம் வகையினர்**

எவர் துயர்கண்டும் இளகாத வன் நெஞ்சமுடையவர்கள் இவர்கள் தான். அழுது தொழுது கேட்டாலும் கொடுக்க மாட்டார்கள். தம்முடைய செல்வத்தை மறைத்து வைப்பார்கள். இவர்கள் பாதிரி மரத்திற்கு ஒப்பானவர்கள். ஒரு மரத்தின் பயன் கனிகள் தருவது பாதிரி மரம் நறுமண மிக்க மலர்களுடன் பூத்துக் குலுங்கும் காய்கள் தரும். ஆயினும் சுவையுடைய கனிகள் தாரது. அதைப்போல இவ்வகையினர் யாருக்கும் பயன்பட மாட்டார்கள் என மனிதர்களை 3 வகை மரத்துடன் (பலா, மா, பாதிரி) ஒப்பிட்டு அழகாக எடுத்துக்கூறியுள்ளார். பலா மரம் பூக்காதா என்ற வினா நமக்கு எழுகிறது. பூக்கும் ஆனால் தெரியாது. அத்தி, ஆல், அரசு, பலா ஆகிய நம்முடைய நாட்டு மரங்கள் 'பூவா மரங்கள்' என் கிறோம். இவை மட்டு மல்லாது, 800க்கும் மேற்பட்ட மர இனங்கள் காணாமல் பூப்பூக்கும் தன்மை உடையன என வேளாண் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். பலா திரள்கனி வகையை சேர்ந்து தான், முன் இருந்த பூக்களே கனியின் மேற்பகுதியில் முட் பகுதியாக மாற்றமடைந்து உள்ளதாக தெரிகிறது. மிக சிறந்த பூக்களில் மகரந்த சேர்க்கை ஏற்பட்ட பின் காய் மட்டுமே நமக்கு தெரிவதால் பூக்கள் தெரிவதில்லை.

அடுத்து பாதிரி மரம் கனி தராதா? என்ற கேள்வியும் எழுகிறது. பாதிரி கனி தரும் அது எருக்கு, இலவம் மாதிரியானவற்றை போல உலர்கனி வகை சார்ந்ததாகும். சாறுள்ளதும் மக்களின் பசியாற்ற வல்லதுமானதையே கனியென்னும் நம்முடைய முன்னோர்கள் கருதினர். ஆகவே பாதிரியின் கனியை ஒரு கனியாக கருதுவதில்லை.

**வேறு எந்த புலவர்கள் மனிதரை மரத்திற்கு ஒப்பிடுகிறார்கள்? தெரியுமா?**

பண்பில்லாதவனை மரத்திற்கு சமமானவராக திருவள்ளுவர் தனது குறளில் ஒப்பிடுகிறார்.

அறம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்.

என்ன மரங்களும், மனிதர்களுடன் ஒப்பிடுகையில் இரண்டுமே உயர்ந்த நிலையில் தான் உள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன்,** **வேளாண் ஆலோசகர்,** **அருப்புக்கோட்டை.** **94435 70289.**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மழையால் நெற்பயிர்கள் பாதிப்பா? காக்க உதவும் பயிர் மேலாண்மை யுக்திகள்

கடந்த சில நாட்களாக, காவிரி பாசன பகுதிகளில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. பல்வேறு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக பயிரிடப்பட்ட சம்பா மற்றும் தாளடி விதைபண்ணைகளில் பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடையக் கூடும். நீரில் மூழ்கி சேதமடைந்துள்ள பயிர்களை நிவர்த்தி செய்ய பயிர் மேலாண்மை முறைகளை கையாளலாம்.

**மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கான உழவியல் பரிந்துரைகள்**

தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, பயிர் மூழ்காதவாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும். பயிரின் நிலைக்கேற்ப ஊட்டச்சத்து நிர்வாகமும் மேற்கொள்ள வேண்டும்.

தேங்கியுள்ள நீரை வடித்தவுடன், வரிசை நடவு மேற்கொண்ட வயல்களில் கோனோவீடர் அல்லது வீடர் கருவி மூலம் மண்ணில் உள்ள சத்துக்களை எடுத்துக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

நீர் வடிந்த பிறகு பயிரன் வளர்ச்சி சரியாக இல்லாத இடங்களில் வளர்ச்சியை மேம்படுத்த ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவுடன் 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து, ஒரு நாள் இரவு வைத்திருந்து, இத்துடன் 17 கிலோ மூரியேட் ஆப் பொட்டா'; கலந்து வயலில் சீராக தூவவேண்டும். இந்த உரங்களை இடும்போது வயலில் சீராக தண்ணீர் வைத்துக் கொள்வதுடன் நீர் வெளியேறி விடாதவாறு பராமரிப்பு செய்ய வேண்டும்.

பயிரின் வளர்ச்சி மிகவும் குன்றி, துத்தநாக சத்து பற்றாக்குறை தென்பட்டால், உடனடியாக ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ யூரியா மற்றும் ஒரு கிலோ ஜிங்க் சல்பேட்டைக் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளையில் தெளிக்க வேண்டும்.

நானோ யூரியாவை ஏக்கருக்கு 500 மில்லி லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாவால் நெற்பயிரில் அழுகல் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஏக்கருக்கு 400 கிராம் கார்பன்டசிம் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து கைதெளிப்பான் கொண்டு உடனடியாக தெளிக்க வேண்டும்.

போதிய சூரிய வெளிச்சம் இல்லாததால், குளிர்ச்சியான சிதோஷ்ண நிலையாலும் மண்ணின் வெப்ப நிலை குறைவாக காணப்படுவதாலும், நெற்பயிரால் போதிய சத்துக்களை எடுத்துக் கொள்ள முடியாது. இத்தருணத்தில் ஏக்கருக்கு 2 கிலோ யூரியா, 2 கிலோ ஏடிபி உடன் 2 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் 200 லிட்டர் நீரில் கரைத்து காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கலாம். மேற்கண்டவாறு வழிமுறைகளை கடைபிடித்து மழையால் பாதிக்கப்பட்ட நெல் விதைப்பண்ணைகளில் தரமான விதையை உற்பத்தி செய்ய திருச்சிராப்பள்ளி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சன்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி தெரிவித்துள்ளார்.




# ‘கழிவுநீர் கலப்பதால் ஆகாயத்தாமரை வளர்கிறது‘

இது ஒரு நாளைக்கு ஒரு செடி 1 லிட்டர் நீரை ஆவியாக்குகிறது எனில் நீர்நிலைகளிலிருந்து எவ்வளவு நீர் ஆவியாகும் என பாருங்கள்.

இதை கட்டுப்படுத்த இரண்டு மூன்று தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். மனிதர்கள் மூலம் அல்லது இயந்திரங்கள் மூலம் தாமரையை நீரிலிருந்து அகற்றுவது வழக்கம். அதே நேரத்தில் AG 11 எனும் அங்கக திரவத்தை தாமரையின் மீது தெளித்தால் 10-15 நாட்களில் செடிகள் காய்ந்துவிடும். அதன்பிறகு அதை எடுப்பது எளிது. நீரிலிருந்து வெளியே எடுத்த தாமரைச்செடிகளின் தண்டு பகுதிகள் பச்சையாக இருக்கும். அதன்மீது மீண்டும் ஒருமுறை AG 11 திரவம் தெளித்து காய வைக்க வேண்டும். பிறகு அவைகளை திட்டு திட்டாக அடுக்கி வைத்து மண்புழுக்களை விட்டு மண்புழு உரமாக மாற்ற வேண்டும். அது பேரூட்டச்சத்துக்கள் நுண்ணூட்ட சத்துக்கள் நிறைந்த உரமாக மாறும்.

பிறகு அந்த நீர்நிலைகளில் நுவால்கி நுண்ணூட்ட திரவத்தை தெளித்தால் ஆகாயத்தாமரைச் செடிகள் வளராது. மாறாக டை ஆட்டம் (Diatom) எனும் கண்ணுக்கு தெரியா பாசிகளை வளர்க்கும். அது மீனுக்கு உணவாகும்.

நீர் நிலைகளில் எவ்வளவு கழிவுநீர் உள்ளே வந்தாலும் வருடத்திற்கு நான்கு முறை நுவால்கி திரவத்தை தெளித்தால் நீர்நிலைகளில் தாமரை வளராது. நீர்நிலைகளும் சுத்தமாக்கப் படும். இந்த முறையை உதகை ஏரியில் கடைப்பிடித்தோம். கரைந்துள்ள உயிர்காற்று 50 அடி ஆழத்தில் (Dissolved Oxygen) லிட்டருக்கு 1-மிகி-லிருந்து 5 மி கி என உயர்ந்தது. மிக எளிமையான செலவு குறைந்த தொழில் நுட்பம்.

தேவைப்படுவோர் முனைவர் இரா.இளங்கோவன், 94433 30394, 79045 19849 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, நவ.28

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தற்பொழுது நிலவி வரும் வடகிழக்கு பருவமழை காலத்தில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பு சம்பா பருவத்தில் 75,600 எக்டர் நெல் சாகுபடி மேற்கொள்ளப் பட்டு தற்பொழுது வளர்ச்சிப் பருவத்தில் உள்ளது. வடகிழக்கு பருவமழையின் காரணமாக பயிர்கள் பாதிப்படைந்து பயிர் மஞ்சள் நிறமாக மாறி இருக்கும். எனவே, வயலில் இருக்கும் அதிகப்படியான நீரினை வடித்து விட வேண்டும்.

மேலும் விவசாயிகள், மழை தேங்கிய வயலில், நீரினை வடித்த பின்பு முக்கிய தொழில் நுட்பங்களை கடைப்பிடித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. விவசாயிகள் உடனடியாக தேவைப் படும் தொழில்நுட்பங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்கள் தொடர்பு கொண்டிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களின் அலை பேசி எண்களை உழவர் செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம். அனைத்து வருவாய் கிராமங்களிலும், விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களை வழங்கிட உதவி வேளாண்மை அலுவ லர்கள் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### சம்பா உர மேலாண்மை தொழில் நுட்பங்கள்

இளம் பயிர்களுக்கு 1 கிலோ ஜிங்க் சல்பேட், 2 கிலோ யூரியா உடன் 200 லிட்டரில் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் இலை வழியாக தெளிக்க வேண்டும். பயிர் வளர்ச்சி குன்றி காணப்பட்டால் ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து ஒரு நாள் இரவு வைத்து 17 கிலோ பொட்டாஷ் கலந்து இட வேண்டும். தண்டு உருளும் பருவம் மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ள பயிர்

களுக்கு, 1.4 கிலோ டி.ஏ.பி. உரத்தினை 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் ஊறவைத்து மறுநாள் வடிக்கட்டி, கரைசலுடன் 2 கிலோ யூரியா மற்றும் 1 கிலோ பொட்டாஷ் உரத்தினை, 190 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை வேளையில் கைத் தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். இவ்வாறு செய்வதினால் மகசூல் இழப்பில் இருந்து பயிரை காப்பாற்றலாம்.

பூச்சி / நோய் மேலாண்மையின் போது விவசாயிகள் தேவைக்கு அதிகமாக யூரியா போன்ற தழைச்சத்து உரங்கள் இடுவதைத் தவிர்த்து, பிரித்துப்பிரித்து, அதாவது ஒரு தெளிப்பிற்கு ஏக்கர் ஒன்றுக்கு 26 கிலோவிற்கு மேல் யூரியா உரத்தினை இடுவதை தவிர்க்க வேண்டும். இயற்கையாகவே நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கையினை அதிகரித்திட வரப்பில் உளுந்து, தட்டைப்பயறு போன்ற பயறுவகைப் பயிர் களைச் சாகுபடி செய்திடவும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்திடவும் வேண்டும். புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்திட ஏக்கருக்கு புப்ரோபெசின் 25 SC என்ற மருந்து 300 மி.லி. அளவும், இலைச்சுருட்டுபுழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்திட குளோராண்டி ரானிலிபுரோல் 24 SC 60 மி.லி அல்லது புளுபெண்டையமைடு 39.45 EC 40 மி.லி அளவும், குலைநோயை தாக்குதலைக் கட்டுப்படுத்திட டிரைசைக்ளோசோல் 75 டபிள்யு.பி. என்ற மருந்து 120 கிராம் என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு தேவையான 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

## ஆனைக்கொம்பன்

தற்போது நிலவும் தட்பவெப்ப நிலையால் புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள நெற்பயிரில் ஆனைக் கொம்பன் ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனைக் கொம்பன் பூச்சியானது நெற்பயிரின் தூர்களின் குருத்து பகுதியை தாக்குவதால் பாதிக்கப்பட்ட இலையானது வெங்காய இலை போன்று மாறிவிடும். ஈ வகையை சேர்ந்த இந்த பூச்சி யானது மஞ்சள் கலந்த பழுப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறமாகவும், கொசுவை போல் சிறியதாகவும், நீண்ட மெல்லிய கால்களுடன் இருக்கும். இதனுடைய புழுப்பருவம் பயிர்களை தாக்குவதனால் தூர்களுக்கு பதிலாக கொம்பு போன்ற கிளைப்புகள் தோன்றும். இந்த கிளைப்புகள் வெண்மை யாகவோ அல்லது இளஞ்சிவப்பு நிறமாகவோ குழல் போன்று வெங்காய இலையைப் போல காணப்படும்.

இதை பார்ப்பதற்கு யானையின் கொம்பை போல் இருப்ப தனால் இது ஆனைக் கொம்பன் என்று அழைக்கப்படுகிறது.

இப்பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேத நிலை அளவை (அதாவது 10 இலைக்கு ஒரு இலை வெங்காயத்தாள்) விட பாதிப்பு அதிகமாகும்போது மகசூல் இழப்பு ஏற்படும்.

இதனை கட்டுப்படுத்த பூச்சிக் கொல்லி மருந்துகளான கார்போசல்பான் 25 சத ஈ.சி – 400 மிலி அல்லது பிப்ரோனில் 5 சத எஸ்.சி – 400 மி.லி ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்திடலாம்.



## பயிர் பாதுகாப்பு

## பாக்டீரியா இலைக்கருகல்

பாக்டீரியா இலைக்கருகல் நோயினை பரப்பும் பாக்டீரியாவானது பாசன நீர் மூலமாகவும், பாதிக்கப்பட்ட பயிரின் மேல் மழைநீர் பட்டு வழிந்தோடுவதாலும், பெருங்காற்று வீசும்போது பயிர்கள் ஒன்றோடொன்று உரசுவதால் உண்டாகும் காயத்தாலும் பரவுகிறது. காற்றுடன் தொடர்ந்து பெய்யும் மழைத் தூறல், மந்தமான தட்பவெப்பநிலை அதாவது 25 முதல் 30 டிகிரி செல்சியஸ் நிலவுதல், காற்றினில் ஈரப்பதம் 90 சதவீதத்திற்கும் அதிகமாக இருத்தல் ஆகியன இந்நோய் பரவுவதற்கு உகந்த சூழல்களாகும். நிழலான பகுதிகள், நெருக்கமாகப் பயிரிடப்பட்டு தழைச்சத்து அதிகமாகவும் சாம்பல் சத்து குறைவாகவும் இடப்பட்ட வயல்கள் போன்றவற்றிலும் இதன் தாக்குதல் அதிகம் காணப்படும்.




நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன் 20 சதவீதப் பசுஞ் சாணக் கரைசல் தெளிக்க வேண்டும். இதற்கு ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் நீரில் நன்கு கலக்கி இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் அதனை வடிகட்டிப் பெறப்படும் தெளிந்த கரை சலுடன் 100 லிட்டர் நீரைக் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு காலை நேரத்தில் தெளிக்க வேண்டும். தாக்குதல் அதிகமாக இருந்தால் காப்பர் ஆக்சிகுளோரைடு 500 கிராம் மற்றும் ஸ்டெரெப்டோமைசின் சல்பேட் மற்றும் டெட்ராசைக்ளின் கலவை 120 கிராம் ஆகிய மருந்துக் கலவையினை 200 லிட்டர் நீரில் கலந்து காலை அல்லது மாலை வேளையில் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

விவரங்களுக்கு தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் தொடர்பு கொண்டு தக்க ஆலோசனைகளை பெற்று பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி அதில் தெரிவித்துள்ளார்.



Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# நெல் வயலில் மகசூல் அதிகரிக்க அசோலா



விருதுநகர், நவ.28

விருதுநகர் மாவட்டம், சேவையூரில் பாரம் பரிய பயிர் உற்பத்தியாளர் கம்பெனி யின் சார்பில் நெல் வயலுக்கு அசோலா இடுதல் செயல்விளக்கமாக செய்து காண்பிக்கப் பட்டது. சிசிடி நிர்வாக இயக்குநர் பத்மாவதி திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோவின் வழிகாட்டுதலின் படி.நெடுங்குளம் கிராமத்தை சார்ந்த கணேசன், அரசு மற்றும் வெற்றிவேல் நெல் வயலில் செயல் விளக்கமாக அசோலா பாசியை செயல் அலுவலர் பார்த்தசாரதி முன்னிலையில் இடப்பட்டது.

அசோலாவை நாமே வளர்த்து இடலாம், அதுமட்டுமல்லாமல் கால்நடைகளுக்கு தீவனமாகவும் கொடுக்கலாம். அசோலாவை நெல் வயலில் இடுவதன் அவசியத்தை வேளாண் வல்லுநர் சந்திர சேகரன் கூறுகையில், நெல் வயலில் அசோலா இடுவதால் மண் வளமும் அதிகரிப்பதுடன் 20% மகசூல் அதிகரிக்கும். அதுமட்டு மல்லாது நிலத்தில் ஒரு தடிமனான அடுக்கு (THICK LAYER) உருவாகி களைகளையும் வளர விடாமல் கட்டுப்படுத்துகிறது. மண்ணின் ஈரப்பத்தை நீண்ட நாட்கள் பாதுகாக்கிறது. பசுமையான அசோலாவில் 0.2-0.3% தழைசத்து உள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

ஏக்கருக்கு 5 கிலோ அசோலாவை இட்டால் அது வெறும் 20 நாளில் 50 முதல் 75 கிலோவாக உற்பத்தியாகி விடும். நெல் வயலில் 2வது களை எடுக்கும்போது அதனை வயலில் மிதித்து விட்டால் அது சிறந்த உரமாகும். நெல் வயலில் அசோலாவை தூவி விட்டாலே அது 3 நாட்களில் நிலம் முழுக்க பரவி விடும் என்றார். அதிகமாக தூர்கள் உருவாகி கூடுதல் மகசூல் கிடைக்கும். அசோலாவே நமமே வளர்க்கலாம். அசோலா பாசி தேவைப் படுவோர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தை நாடலாம். மேலும் மேலுரமாக யூரியா பயன்படுத்தும் போது 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்துமுதல் நாள் வைத்திருந்து மறுநாள் 18 கிலோ ஜிப்சம் மற்றும் 17 கிலோ பொட்டாஷ் கலந்து இடவேண்டும். நிலக்கடலைக்கு விதைநேர்த்தி செய்து ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டி.விரிடி கலந்து விதைத்தால் மண் மூலமாக பரவும் பூஞ்சான நோய்கள் கட்டுப்படுத்தப்படும் என்றார். அனைத்து விதமான இடு பொருட்களும் (விதை, உரம், பூச்சி மருந்து) சேவையூரில் உள்ள அக்ரி கிளீனிக்கில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்தார். இந் நிகழ்வில் கள பணியாளர் பரதன் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

# இயற்கை விவசாயத்தின் ஒரு அங்கம் சூடோமோனஸ் புளோரோசன்ஸ்

## சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் தகவல்

திருச்சி, நவ.28

சூடோமோனஸ் புளோரோசன்ஸ் என்பது ஒரு உயிர் பூஞ்சாணக் கொல்லியாகும். இது பயிர்களில் நோயை உண்டு படுத்தம் பூஞ்சாணங்களை கட்டுப்படுத்தி நோய் வராமல் பாதுகாக்கின்றது. இதனை எல்லா பயிர்களுக்கும் பயன்படுத்த லாம். சூடோமோனஸ் புளோரோசன்ஸ்ப யிர்களில் இலைக் கருகல், இலைப்புள்ளி, குலைநோய், துருநோய், வாடல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தும் உயிர் பூஞ்சாணக் கொல்லியாகும்.




### நன்மைகள்

- சூடோமோனஸை பயன்படுத்துவதால் பயிர்களில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.
- பயிர்களுக்கு தேவையான வளர்ச்சி ஊக்கிகளை (ஹார்மோன்கள்) உற்பத்தி செய்கிறது.
- பயிர்களின் வேர்களைத் தாக்கும் நூற்புழுக்களை (நெமட்டோடு) கட்டுப்படுத்துகிறது.

### பயன்படுத்தும் முறைகள்

### விதை நேர்த்தி

ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனஸை சிறிது நீர் தெளித்து கலந்து அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி பின்பு நடவு செய்யலாம்.

**வயலில் இடுதல்**

2 கிலோ சூடோமோனஸ்சை 200 கிலோ மக்கிய இயற்கை உரத்துடன் கலந்து 4 நாட்கள் நிழலில் காற்று புகாமல் மூடி வைத்த பிறகு, நிலத்தில் ஈரம் இருக்கும் பொழுது அடியுரமாக இடவும்.

**தெளிப்பு முறை**

சூடோமோனஸ் ஒரு கிலோ பவுடரை 100 லிட்டர் நீரில் கரைத்து தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளையில் பயிர் நனையுமாறு தெளிக்கலாம் அல்லது தண்ணீருடன் கலந்து வேர் பகுதியில் ஊற்றலாம்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு (91717 17832) தெரிவித்தார்.

